# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி - 1969

புதிய உலகம் வானொலி நிகழ்ச்சி
ஆயிரமாவது மலர்
நிறைவு விழா வழிபாடு





முன்னாள் யாழ் ஆயர்
வ. தியோகுப்பிள்ளை அவர்களுக்கு
கௌரவ கலாநிதி பட்டம்

ஒக்டோபர் ~ 1999 ~~~~~~~~~~ 12/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பக்கம்

## செப்டம்பர் இதழில்

தொண்டன் செப்டம்பர் இதழில் "இருதாயும் ஒரு தேசமும்" என்ற கவிதை மிக நன்று. அதே போல் "செபித்துப் பார்" என்ற கவிதையிலும் செபத்தின் பயன் செபத்தில் இல்லை ~ உன் நடத்தையில் என்ற வரிகள் எவ்வளவு முக்கியமானது! "வண்டியின் அச்சாணி" என்ற சிறுகதை தலைப்புக்குப் பொருத்தமாகவும் கூற வந்த விடயத்தை மிக இறுக்கமாகவும் சொல்லியுள்ளது. சமூக நோக்கில் திருமணம் ~ விவாகரத்து விளைவுகள் என்ற கட்டுரை மிகப் பயனுள்ள விடயங்களைத் தருகிறது. தாய் ~ சேய் உறவுக் கீறல் ஏற்படாமல் தடுக்க என்ன வழி என கட்டுரை எழுதினால் பயனுள்ளதாக அமையும்.

**ந. பார்த்திபன்**
**கண்டி**

## மனங்கவர்ந்த ......

தொண்டன் சஞ்சிகை கிடைக்கப்பெற்றேன் நன்றி. இடம் பெற்றுவரும் சிறந்த பல கட்டுரைகள் மனதைக் கவர்ந்து வருகின்றது.

**G.B. மேர்சி ஜெயா**
**இரத்மலானை.**

## கிறிஸ்து பிறப்பு ~ புத்தாண்டு விழாப் பாடல்கள்

எதிர்வரும் கிறிஸ்து பிறப்பு விழா புத்தாண்டு விழா வழிபாடுகளில் பாடுவதற்கும் வீடுகளில் கேட்பதற்கும் ஏற்ற பாடல்கள் தொகுக்கப்பட்ட ஒலி நாடா தயாராக உள்ளது.

பெற்றுக்கொள்ள எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.

பாடல்களின் எழுத்துப்பிரதியும் வழங்கப்படும்.

**விலை** :120/=

**தபாலில் பெற** : 130/=

**தொடர்புகளுக்கு:**

**இயக்குனர்**
**சமூகத் தொடர்பு நிலையம்**
**த.பெ.எண் 44**
**மட்டக்களப்பு.**

## கிறிஸ்து பிறப்பு ~ புத்தாண்டு விழாச் சிறப்பிதழ்

எதிர்வரும் டிசம்பர் மாத தொண்டன் இதழ் கிறிஸ்து பிறப்பு புத்தாண்டு விழா சிறப்பிதழாக டிசம்பர் ~ ஜனவரி இரு மாதங்களையும் இணைத்து வெளிவரும்.

பொருத்தமான ஆக்கங்களை எழுத்தாளர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய இறுதி நாள்

**15 நவம்பர் 1999**

**ஆசிரியர்**
**தொண்டன்**
**த.பெ. 44**
**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஒக்டோபர் - 1999

மலர் 31 — இதழ் 09



ஆசிரியர்:
A. தேவதாசன்

இணை ஆசிரியர்:
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்:
S. A. இருதயநாதன்
மெற்றில்டா இராஜேந்திரம்




வெளியீடு:
சமூகத் தொடர்பு நிலையம்,
திரு/மட். மறை மாவட்டம்.

முகவரி:
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44,
BATTICALOA. 30000
Tel: 065-22723

விலை: 12/-

ஆண்டுச் சந்தா: 140/-
(தபாற்செலவு உட்பட)

உள்ளே........


1. இதயந்திறந்து ... 02
2. ஆண்டவரின் அன்பன் ... 03
3. அண்ணல் அசிசியின் ... 04
4. வீதி நாடகப்பயிற்சி ... 05
5. வழிபடு ... 08
6. புனித நாட்டுப் பயணம் ... 09
7. கலை இலக்கிய மஞ்சரி ... 11
8. கதைசொல்லும் விவிலியம்... 12
9. சுவடுகள் ... 13
10. மனித மேகங்கள் ... 14
11. ஒரே பாடல் ... 15
12. நிறைவான நிறைவு ... 17
13. திருச்சபைச் செய்திகள் ... 18
14. சமூக நோக்கில் ... 20
15. புதுக்குடியிருப்பை ... 21
16. விவிலிய - பொது அறிவு ... 23
17. போட்டி முடிவுகள் ... 24


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயந் திறந்து...........

காத்திருந்த காலம்
அண்மித்து வந்துவிட்டது
அன்று மக்கள் மெசியாவுக்காகக் காத்திருந்தார்கள்
இன்று அவர் பிறந்த பூமிக்காகக் காத்திருக்கிறோம்
எதிர்பார்த்திருந்த நாட்கள் அண்மித்துவிட்டன
அந்த நாளை சந்திக்க ஆயத்தமா?
கார்த்திகை மாதம் 28ம் திகதி
1ம் திருவருகைக்கால ஞாயிறுடன்
ஆரம்பமாகிறது மாபெரும் யூபிலி ஆண்டு

ஆம் யேசு பிறந்த
2000ம் ஆண்டு மலர இருக்கிறது.
ஒவ்வொரு கிறிஸ்தவனும், குடும்பமும்,
பங்கும், மறைமாவட்டமும், முழுத்திருச்சபையும்
இதைக் கொண்டாட வேண்டும்.
இதில் புதியன தோன்ற வேண்டும்.
புதிய மனம், புதிய அன்பு, புதிய சமாதானம்
புதிய திருச்சபை உதயமாக வேண்டும்.
நீ உன்னை புதிய மனிதனாக்கு
எல்லாமே புதியதாகி விடும்.

★ ஆசிரியர்

---

குழந்தைப் பருவமும் இளமையும்
மறையக்கூடியவையே ஆகையால்
உன்னைப் படைத்தவரை உன் இளமைப்
பருவத்தில் மறவாதே.

சபை உரை: 21/01

# ஆண்டவரின் அன்பன் அண்ணல் அசிசி



அனைத்துலகிலும் விசேஷமாக இத்தாலியிலும், அக்கிரமங்களும் அநியாயங்களும் பரவலாகக் கிடந்த காலத்தில் தோன்றிய அசிசி பிரான்சிஸ்கு, அன்பே உருவான அமைதியே வடிவமான, ஏழ்மையே உடைமையாகக்கொண்டு, இப்பூவுலகில் மனித அவதாரம் பண்ணின இறைமகன் கிறிஸ்துவைத் தமது வாழ்விலே முழுமையாகப் பின்பற்றினார். விண்ணரசைப்பெற வேண்டுமென்ற ஆவலினால், விண்ணரசின் மதிப்பீடுகளை உலகிலே வாழ்ந்து காட்டியவர். ''எளிய மனத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில், விண்ணரசு அவர்களதே'' (மத். 5:3.) இவ்வசனத்தைத் தம்முடையதாக்கி வாழ்ந்தவர். இடுக்கான வாயிலையே தேர்ந்துகொண்டவர். இறைவனின் பராமரிப்பிலே மிகுந்த நம்பிக்கை வைத்து வாழ்ந்தவர். தலைசாய்க்க மனுமகனுக்கு ஓர் இடம் இல்லையே என்று கூறிய ஆண்டவரின் திருவாக்கை ஏற்று, தேசாந்திரியாய் அலைந்து திரிந்து நற்செய்தியை அறிவித்தவர். விடாது முயற்சித்து விண்ணரசைச் சுதந்தரித்துள்ளார். விண்ணரசின் மறைபொருளை நன்கு அறியக்கொடுத்து வைக்கப்பட்டவர் ஆனார். விண்ணரசின் பொருட்டு, இப்புனிதர் தம் வயலாகிய சபையிலே நல்ல விதைகளையே விதைத்துள்ளார். விண்ணரசிலே பெரியவராய் இருக்க, இவ்வுலகிலே தம்மைத் தாழ்த்தி வாழ்ந்தவர்.

அன்று திருச்சபைக்கு சவால் விட்டதின் மூலமாகப் பெரும் மாற்றங்கள் ஏற்படக் காரணராய் இருந்தார். திருந்திவாழ, புரிந்துவாழ, பகிர்ந்துவாழ திருச்சபையிடம் வேண்டுகோள் விடுத்தார். அன்பிய வாழ்வை, தியானப்படிமுறை வாழ்வை, பங்குபற்றும் திருச்சபைக்கூடாக நடைமுறைப்படுத்த உழைத்தார். மேய்ப்பர்கள் மந்தைகளைத் தேடிப்போகும்படி அறைகூவல் விடுத்தார். ஆகாயத்துப் பறவைகளையும், காட்டில் வாழ் புல் பூண்டுகளையும், விலங்குகளையும் ஆகாய விரிவையும் பார்த்து, அவைகளை அன்புசெய்து, இயற்கை வளத்துடன் ஒன்றுபட்டு, அவற்றினூடே தந்தையாம் இறைவனைக் கண்டார் இப்புனிதர். நோயாளிகளின் புண்களைத்தொட்டார், பாவிகளின் பாவங்களைத்தொட்டார். அநாதைகளுக்குப் புகலிடமும், ஆதரவற்றோர்க்கு ஆறுதலுமானார். இன்பத்திலும் துன்பத்திலும், வறுமையிலும் வளத்திலும் வாழத்தெரிந்தவர். ஆன்ம தாகம் கொண்டு உழைத்த இப்புனிதரின் அன்பும், பகிர்வும், தாகமும், மன்னிப்பும், பிறர்வாழ்வில் கரிசனையும். நம்மிலும் கொண்டு, கிறிஸ்து புகழப்பட, அறியப்பட நற்செய்தித் தூதுவர்களாக உழைத்திடுவோம்.

அருட்சகோ. ஞா. மரியநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணல் அசிசியின்
# அன்றாட அகவல்

ஆக்கிடுவீரே எம் இறைவா எனை நின்
அமைதியின் கருவியாய் என்றுமே,
அன்பைப் பகையுள்ள இடந்தனிலும்
அளவற்ற மன்னிப்பைப் பகையிடந்தனிலும்
அளப்பெரும் விசுவாசம் சந்தேகந்தனிலும்

அருட்பெரும் நம்பிக்கை மனந்தளருமிடத்தும்
அகமகிழ்வைத் துயருறுமிடத்தும்
அருளொளிதனை இருள்நிறையிடத்தும்
அன்றாடம் நானும் காட்டிடச்செய்யும்,

ஆ, திவ்விய குருவே மாமுனியே
ஆறுதல்பெறவன்று ஆறுதல் அளிக்க
அறியப்படவன்று அறிந்துகொள்ள
அன்பைப்பெறவன்று அன்புசெய்ய
அடியேனுக்குன் வரந்தருவீரய்யா,

அளிப்பதால் மட்டுமே பெறமுடியும்
அணைப்பதால் மட்டுமே மன்னிப்புப் பெறலாம்
அழிவதால் மட்டுமே புதிதாய்ப் பிறக்கலாம்
அன்பரசே நின் நினைவில் நான் வாழ
அருளுவீர் நின்துணை எனக்கென்றும்.

அ. வரிசைப்படுத்தி ஆக்கியவர்:.

அருட்சகோ. ஞா. ம. நாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி நாடகப் பயிற்சி நெறியாளர் அருட்சகோதரி கிளேயர் I. C. M. (தமிழ்நாடு) அவர்களுடன் ஒரு சந்திப்பு

பெனி சே. ச.

சிஸ்டர் கிளேயர் - இந்தப் பெயரை தமிழக வீதி நாடகக் கலைக் குழுக்கள் எதுவும் கேள்விப்படாமல் இருக்கமுடியாது. தமிழ் நாட்டில் வீதி நாடகக் குழுக்களின் ஒருங்கிணைப்பாளராக இருக்கும் இவர் 15 வருடங்களுக்கு மேலாக சுமார் 160க்கும் மேற்பட்ட வீதி நாடகப் பயிற்சி பாசறைகளை நடாத்தியிருக்கிறார்.

மரியாயின் மாசற்ற திரு இருதய வேத போதகச் சபையைச் (Missionary Sisters of the immaculate heart of Mary) சேர்ந்த இவர் கடந்த வருடம் அக்டோபர் மாதம் நுவரெலியாவிலுள்ள Palm Foundation நிறுவனத்தின் அழைப்பின் பேரின் இரண்டு வார பயிற்சி நெறிக்காக இலங்கை வந்திருந்தார். அந்தப் பயிற்சியில் பங்குபற்ற எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

பயிற்சியின்போது இவர் ஒரு பெண் சுடிதார் சல்வார் கமிஸ் அல்லது டீசேர்ட் ஜீன்ஸ் சகிதமே காணப்படுகிறார். பயிலுனர்களுக்கு இவரை ஒரு Rev. Sister ராகத் தெரியாது. 'அக்கா' என்றே அழைக்கப்படுகின்றார்.

கடந்த மாதம் இங்கிலாந்தில் நடைபெற்ற Play back Theater வாழ்வு நிகழ்வு அரங்கத்தின் ஏழாவது மாநாட்டில் கலந்துவிட்டு, தமிழ் நாட்டு சமூக மேம்பாட்டுக் கண்காணிப்புக் குழுவில் ஆய்வாளராக கடமையாற்றும் திரு. சிறில் அலெக்ஸாண்டர் சகிதம் இலங்கை வந்திருந்தார். மட்டக்களப்பிற்கு ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்ட இவர்கள் தந்தை போல் சற்குணநாயகத்தின் ஏற்பாட்டின் பேரில் கடந்த மாதம் 21ம் தேதி வண்ணத்துப் பூச்சிப் பூங்காவில் ஒரு நாள் வீதி நாடகப் பயிற்சி அறிமுகம் செய்தார்கள். தொண்டன் வாசகர்களுக்காக அவர்கள் வழங்கிய பேட்டி இது.

★ வீதி நாடகத் துறையில் எவ்வாறு உங்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது?

❊ இந்தத் துறையில் ஈடுபடுவதற்கு முன்பே நான் 15 வருடங்களாக தலித் மக்கள் மத்தியில் களப்பணி செய்துகொண்டிருந்தேன். அவர்களின் பிரச்சினைகளை வெளிச்சம் போட்டுக்காட்ட நாடகம் என்ற ஓர் ஊடகம் தேவைப்பட்டது. ''Role Play'' மூலமாக இதைச் செய்துகொண்டிருந்தேன். 1984ல் வீதிநாடகத்தின் தந்தை 'பாதல் சக்கார்' கல்கத்தாவிலிருந்து மதுரைக்கு வீதி நாடகப் பயிற்சி கொடுக்க வந்திருந்தார். அதில் பயிற்சி பெற எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பயிற்சியில்தான் எனது சக்தியையும், இந்நாடகத்தின் முக்கியத்துவத்தையும் உணர்ந்தேன். அதுமுதல் வீதி நாடகக் களப்பணியாளராகவே சிறப்பாகப் பணிப்புரிகிறேன்.

★ பொதுவாக துறவற சபைகளின் கன்னியர்கள் ஆசிரியைகளாக அல்லது தாதியாக இருப்பார்கள். ஒரு துறவியாக நீங்கள் 'கான்வெண்ட்' என்ற வட்டத்தை மீறி சமூகப்பணியாளராக எப்படி பரிணமிக்க முடிந்தது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ நான் 'கான்ட்வென்ட்'டில் சேர்ந்ததே சமூகப்பணி செய்யவேண்டும் என்பதற்காகத் தான். அதை தடைபண்ணியிருந்தார்கள் என்றால் சேர்ந்திருக்க மாட்டேன். எனது குடும்பம் பொருளாதார வளமுடையது. ஆனால் என்னைச் சூழ்ந்திருந்த ஏற்றத்தாழ்வுகள் அதிலிருந்து எழும்பிய கேள்விகள்தான் என்னை சமூகப் பணியாளராக மாற்றியது. நான் கிராமத்தில் வளராதவள். ஆறாம் வகுப்புப் படிக்கும்போது போன பள்ளிச் சுற்றுலாவில் கிராமங்களுக்குப் போனேன். ஏழை மக்களுக்காக அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும் என்ற உணர்வு அப்போதுதான் ஏற்பட்டது.

★ நீங்கள் எந்த நோக்கத்திற்காக துறவற வாழ்வைத் தெரிவு செய்தீர்களோ அந்த நோக்கத்தில் ''நின்று பிடிப்பதாக'' உணர்கிறேன். உங்களுடைய முயற்சிகளுக்கு உங்களுடைய சபை ஒத்துழைப்பு நல்கியதா?

❊ ஆரம்பத்தில் பலத்த சவால்களையும் புரிந்துகொள்ளாத தன்மையையும் சந்திக்க நேர்ந்தது. தனிமை, வெறுப்பு, ஒதுக்கப்பட்ட நிலை இவையெல்லாம் நேர்ந்தன. நான் கிறிஸ்துவின் வாழ்வை உதாரணம் காட்டி விவாதிப்பேன். ஏறக்குறைய பத்து வருஷங்கள் மிகக் கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டன. எங்கள் சபையில் சமூகப் பணியில் ஈடுபட்ட முதல் நபர் நான்தான். எனக்கு வழிகாட்டல் இல்லை. என்னைப்போன்று நோக்கத்தோடு சேர்ந்தவர்கள் தாக்குப் பிடிக்க முடியாமல் வெளியே போனதும் உண்டு.

★ தற்போது உங்கள் பணிக்கு பூரண ஆதரவு உண்டா?

❊ ஆம், திருச்சபையிலே பல மாற்றங்கள் நிகழ்கின்றன. வெளிச்சூழலின் தாக்கத்தால் மதங்களிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. ஒதுக்கப்பட்ட நிலையிலிருந்த நான் எங்கள் சபை மேலாளருக்கு துணை மேலாளராக 4 வருடங்கள் கடமையாற்றத் தெரிவுசெய்யப்பட்டேன். என்றாலும் 100 வீதம் ஏற்றுக் கொண்டார்கள் என்று கூற முடியாது. அதை எதிர்பார்க்கவும் முடியாது.

★ ஒரு வீதி நாடகத்தை நிகழ்த்தும்போது அதன் வழியாக மக்கள் மத்தியில் பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்லும்போது நீங்கள் சந்திக்கும் சவால்கள் தடங்கல்கள் யாவை?

❊ ஒரு வீதி நாடகத்தை நிகழ்த்தும்போது மூன்று விதமான தடங்கல்கள் நேரிடலாம்.

1. நிகழ்த்துபவர்களுக்கு அதாவது கலைக் குழுவிற்கு.

2. பார்வையாளர்களுக்கு.

3 சூழ்நிலையில் ஏற்படக்கூடியத் தடங்கல்கள்.

தேர்தல் காலக்கட்டத்தில் நாம் வீதி நாடகம் நிகழ்த்தும்போது நாம் நாடகத்தின் வழியாகச் சொல்லும் கருத்துக்கள் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களைக் காயப்படுத்தலாம். தலித் மக்களின் பிரச்சினைகளை மையப்படுத்தும்போது தலித் அல்லாத உயர் சாதியினர் 'கரண்ட்கட்' செய்வது, கல்லடிப்பது போன்ற கலாட்டாவில் ஈடுபடுவது உண்டு.

நிகழ்த்துபவர்களுக்கு ஏற்படுகின்ற சிக்கல் பாதுகாப்புக்கருதி பெற்றோர்கள் பிள்ளைகளை குறிப்பாக பெண் பிள்ளைகளை பயிற்சிக்கு அனுப்பாதது. ஆண்பிள்ளைகளிடம் பழக அனுமதிக்காதது தடங்கலாக உள்ளன.

★ வீதி நாடகத்தை நிகழ்த்தும்போது உங்களுக்கு ஏற்பட்ட ஓர் உச்சக்கட்ட அல்லது ஒரு மறக்கமுடியாத அனுபவத்தைக் கூறமுடியுமா?

❊ குஜராத்தில் பயிற்சி கொடுத்தபோது ஒரு 53 வயதுள்ள 'அம்மாவும்' பயிற்சியில் கலந்துகொண்டார். வடநாட்டு நாகரீகத்தின் படி மூக்காடு அணிந்திருந்தார். ஆனால் முகத்தையும் மறைத்து தலையையும் தொங்கப்போட்டபடியே இருந்தார். காரணம் கேட்டபோது அவருடைய மகள் அதற்கு முந்தைய வாரம் ''பொய் சீசன்'' டிக்கட்டில் பயணம் செய்து பொலிசிடம் மாட்டியிருக்கிறார். 200/- தண்டம் கட்ட நேரிட 'அம்மாவிடம் எப்படி பணம் கேட்பது' என தூக்கில் தொங்கிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுநாள் பயிற்சிக்குப்பின் அந்தத்தாய் முக்காடை வரிந்து இடுப்பில் கட்டிக்கொண்டு 'தடுக்கப்பட்ட பிள்ளைகள் அனைவரும் என் பிள்ளைகளே' என சமூகப்பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டது ஒரு மறக்கமுடியாத சம்பவம்.

இன்னொரு சம்பவம் திண்டிவனத்தில் ஒருமுறை நாடகம் நிகழ்த்தினோம். ஒரு தலித்தை ஒரு 'டீ' கடைக் காரன் திட்டு வதைப்போன்ற காட்சி. பார்வையாளர்களின் ஒருவர் கடைக்காரராக நடித்தவரை அடிக்க எழும்பியவுடன் அவரை கட்டுப்படுத்த நான் பட்டபாடு இருக்கிறதே அப்பப்பப்பா.

★ இந்தியாவில் வட மாநிலத்தில் எல்லாம் பயிற்சி கொடுக்கிறீர்கள் எந்தெந்த மொழி களில் பயிற்சி பாசறை நடாத்துகிறீர்கள்?

❋ கிட்டத்தட்ட எட்டு மானிலங்களில் பயிற்சி கொடுத்திருக்கிறேன். தமிழகம் தவிர்ந்த மானிலங்களில் ஆங்கிலத்தில்தான். மொழிப் பெயர்ப்பாளர்கள் உண்டு.

★ இதுவரைக்கும் எத்தனை வீதி நாடகங்கள் நிகழ்த்தியிருப்பீர்கள்? எத்தனை பயிற்சி முகாம்கள் நடாத்தி இருப்பீர்கள்?

❋ எனக்கென்று 'தனிக்குழு' இல்லை. ஆகவே நிகழ்த்துதல் குறைவு. ஏறக்குறைய 160 பயிற்சி முகாம்கள் கொடுத்துள்ளேன்.

★ உங்களது தமிழகச் சூழலில் பொதுவாக வீதி நாடகங்களில் மையப்படுத்தும் முக்கியப் பிரச்சினைகள் என்ன?

❋ அது நாங்கள் யார் மத்தியில் வீதி நாடகத்தை நிகழ்த்துகிறோம் என்பதைப் பொறுத்தது. மீனவர்கள் மத்தியில் நிகழ்த்தும்போது மீன்பிடித்தலை ஒட்டிய பிரச்சினைகள் விவசாய மக்கள் மத்தியில் நிகழ்த்தும்போது எமது பாரம்பரிய விவசாயத்திற்கு எதிராக அறிமுகப்படுத்தப்படும் சகல எதிர்ப்புச் சக்திகளையும் சாடி பொதுவாக தலித் மக்கள் பெண்கள் - உழைக்கும் சிறுவர்கள் - இவர்களின் பிரச்சினைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறோம். இதைத்தவிர கோத்தரியில் வாழும் தாயகம் திரும்பிய மலையக மக்கள் மத்தியிலும் அவர்களது பிரச்சினைகளை மையப்படுத்தி நிகழ்த்தியிருக்கிறோம்.

★ உங்கள் அனுபவத்தில் வீதி நாடகங்கள் எந்த அளவிற்கு மக்கள் மத்தியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன?

❋ கல்லூரி மாணவர்களை பரந்த அளவில் சிந்திக்க தூண்டியிருக்கும். ஒடுக்கப்படும் மக்கள் தங்கள் நிலையை உணர்வதற்கு வீதி நாடகங்கள் பாரிய பங்களிப்பைச் செய்திருக்கின்றன. அரசைக் கேள்வி கேட்கவும் போராட்டங்கள் வெடிக்கவும் இன்று ஒடுக்கப்படும் குழுவாக கொதித்தெழவும் வீதி நாடகங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

★ தமிழகத்தில் தமிழ்த் தேசியம், தமிழர் தேசியவாதம் போன்ற சிந்தனைகள் வலுப் பெற்று வருவதாக அறிகிறோம். நந்தன், புதிய கலாச்சாரம் போன்ற பத்திரிகைகளும் தமிழ்ச் சான்றோர் போன்ற அமைப்புக்களும் இதுபற்றி வெளிப்படையாகவே பேசுகிறார்கள் என்றாலும் இன்னும் தமிழகத்தில் சாகிய ஆக்கிரமிப்பு, நாயக வழிபாடு - பெண்ணடிமைத் தனம் உம்பாட்டுக் கலாச்சாரம் ஒழிந்தபாடில்லை இதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?

❋ தமிழன் இன்று தமிழகத்தில் பல்வேறு கூறாக பிரிந்து நிற்பதற்குக் காரணமே ஒட்டுமொத்தமான எதிரி யார் என்பது இன்னும் கூர்மைப்படுத்தப்படாததுதான் ஒரு இனத் திற்கான போராட்டம் அங்கு நிகழ்ந்தா இந்தப் பேதங்கள் மறைய சாத்தியமுண்டு.

இன்னும் வரும்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபடு

★ கே. ஜே. வேலுப்பிள்ளை

இறைவனை வழிபடுவாய் - என் நெஞ்சே
இன்னல்கள் தீர்ந்துவிடும்
கறைதிரை நீங்கிவிடும் - உள்ளத்தில்
கருணை பிறந்துவிடும்
மறையுன் வழிகாட்டும் - மனத்தினை
மாசற்றதாக்கிவிடும்
நிறைவுடன் வாழ்வமையும் - நிதம் நிதம்
நிம்மதி தோன்றிவிடும்.

பாவ அறிக்கை செய்வாய் - என் நெஞ்சே
பாரமகன்று விடும்
ஆவலாய்த் தேவனுனை - அணைத்து நல்
ஆறுதல் தந்திடுவார்
பூவுலகின் பாரம் - அனைத்தையும்
புறம்பே அகற்றிவிடு
தேவைகளை இயேசு - திருமலர்ப்
பாதம் படைத்துவிடு.

சிலுவை சுமந்தாரே - என் நெஞ்சே!
சிறுமை யடைந்தாரே
வலமிடம் கள்வரிடை - மனுமகன்
வாதையடைந்தாரே
உலகினை மீட்கவென்றே - உயிர்ப்பலி
ஆகி உயிர்த்தாரே
அலகை வென்றானந்திப்பாய் - அவர்பாதம்
அண்டி நீ ஓடியேவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித நாட்டுப் பயணம்

## தொடர் – 37

★ அருள்தந்தை பி. ஜோசப்

ஒருவாறு சமாளித்து இரண்டு மணி நேரம் ஏறியதும், தாகசாந்தி செய்யக்கூடிய வகையில் அமைக்கப்பட்டிருந்த டீக்கடை ஒன்றில் எல்லோரும் தேனீர் அருந்தினோம். நீர் தொடக்கம் கடைக்குத் தேவையான அனைத்தும் மலையடிவாரத்திலிருந்தே மேலே கொண்டுவரவேண்டுமென்பதால், தேனீர் உட்பட அனைத்தும் கூடிய விலையிலேயே விற்கப்பட்டன. மேலே செல்லச் செல்ல விலையும் அதிகரித்துச் செல்லும் என்பதை எங்கள் வழிகாட்டி முன் கூறி வைத்தார். மலையின் உச்சிவரை இடையிடையே இத்தகைய சிறிய கடைகள் அமைக்கப்பட்டிருப்பதால் பலருக்கும் பலவிதத்தில் நன்மை பயப்பதாகவே இருந்தது.

சூரிய உதயத்துக்கு முன்பு மலையுச்சியை அடையவேண்டும் என்ற ஆவலில் எமது மலையேறும் படலம் தொடங்கியது. நம் நாட்டிலுள்ள சிவனொளிபாத மலையில் ஏறுபவர்கள் முக்கியமாகப் பார்க்க விரும்புவது சூரியோதயத்தைத்தான். அவ்விதமே சீனாய் மலையில் எல்லோரும் இரவில் ஏறுவதன் அடிப்படைக் காரணம். ஏறக்குறைய 7000 அடி உயரத்திலிருந்து சூரியோதயத்தைக் கண்டு களிப்பதுதான் என்பதனைச் சொல்லாமலே புரிந்துகொள்வர்.

அப்படியானால் சீனாய் மலையின் மகிமை எதில் தங்கியுள்ளது எனப் பலர் வினாவெழுப்பலாம். ஆம், சீனாய் மலையில்தான் இறைவன் மோயீசனுடன் உரையாடினார், மக்களுடன் மோயீசன் வழியாக உடன்படிக்கையைச் செய்துகொண்டார் என விவிலியம் கூறுகின்றது. ஆனால் சீனாய் மலை என்பது மூன்று அல்லது நான்கு மைல் பரப்பளவினைக் கொண்ட மலைத்தொடராகும். எனவே இத்தகைய சீனாய் மலைத் தொடரிலே "இந்த இடத்தில்தான் மோயீசன் தங்கியிருந்தார்" என்றோ, அல்லது "இந்த இடத்தில்தான் மோயீசனுக்கும் கடவுளுக்குமிடையில் உரையாடல் நடந்த"தென்றோ குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. ஆயினும், ஆதி காலந்தொட்டே குறிப்பிட்ட ஓரிடத்தை கூறி வந்ததால், அவ்விடத்தை நோக்கி மக்கள் ஒன்றாகச் சென்று பார்வையிடத் தொடங்கினர். அவ்விடமே இன்று நாங்கள் ஏறிச் சென்ற இடமுமாகும்.

எப்படியோ சமாளித்து காலை 4 மணியளவில் அவ்விடத்தை அடைந்தோம். அங்கு சென்றவுடன் முதன் முதலில் தேனீர்க் கடையில் சூடாக தேனீர் அருந்தி களைப்பை ஆற்றிக்கொண்டோம். பாழடைந்த மண்டபம் போன்ற ஒரு கட்டிடம் இருந்தது. எங்களுக்கு முதல் ஏறிய பயணிகள் அனைவரும் மூலைக்கு மூலை இடத்தைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தனர். கடுமையான குளிர்காற்றினைத் தாக்குப் பிடிக்க வேண்டின் அவ்வாறுதான் ஒதுங்கி ஒன்றாக அமர்ந்திருக்கவேண்டும். நாங்களும் இருட்டுக்குள் தட்டுத்தடுமாறி, ஒதுக்குப்புறமாக ஓரிடத்தில் இடத்தைப் பிடித்துக்கொண்டு வைகறைப் பொழுதிற்காகக் காத்திருந்தோம். மலையில் மின்சாரம் இல்லாததால் அரிக்கன் லாம்புகள் போன்ற மண்ணெண்ணை விளக்குகள்தான் இங்கொன்றும் அங்கொன்றுமாக சிறு ஒளியைப் பரப்பிக்கொண்டிருந்தன.

ஒருசிலர் களைப்பில் உறங்கிவிட்டாலும் பலர் கிழக்குத் திசையை நோக்கிய வண்ணமாக விழிப்போடும் ஆவலோடும் கண் விழித்துக் காத்திருந்தனர். கிழக்குத்திசை வெளுக்கத்தொடங்கியது. எல்லோரும் பரபரப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியோதயக் காட்சியை படம் எடுப்பதற்கு ஆயத்தமானார்கள். நாங்களும் எங்களது காமிராக்களை வெளியே எடுத்து ஆயத்த நிலையில் வைத்துக்கொண்டோம். சூரியோ தயத்தின் அழகை வர்ணிக்கக் கூடிய கலைத் திறன் என்னிடம் இல்லை என்பதை ஒப்புக் கொள்ளவேண்டும்.

முதலில் கிழக்குத் திசை சிவந்தது. படிப் படியாக அது பரவியது. இறுதியில் வட்ட வடிவமான பந்தொன்று ஆழ்கடலினிலிருந்து எழுவதுபோல் மெதுமெதுவாகமேலெழுந்தது நமது கடற்கரைகளிலே சூரியோதயத்தை ரசித்திருக்கிறேன். சிவனொளிபாதமலையில் நின்றும் அக்கண்கொள்ளாக் காட்சியைக் கண்டும் ஆனந்தம் அடைந்திருக்கிறேன். ஆனால் சீனாய் மலையினின்று சூரியோத யத்தைக் காண்பதென்பது எல்லோருக்கும் எளிதில் கிடைத்தற்கரிய காட்சியாகும் என் பதால் அது தனித்துவமானது.

எல்லோரும் ஒவ்வொரு கோணத்திலி ருந்து கொண்டு சூரியோதயக் காட்சியைப் படம்பிடிப்பதில் முனைந்தனர். அமைதியாக இருந்த மலையில் ஆரவாரம் அரும்பத் தொடங்கியது. சுமார் 6 மணியளவில் எங் கும் பகலாகிவிட்டது. நாங்கள் நின்ற இடத் திலிருந்து கண்ணுக்கெட்டிய தூரம் வரை மலைத்தொடரைத்தான் காண முடிந்தது. சீனாய் மலைத் தொடர் எங்கும் பரந்து விரிந்திருந்தது.

வேறு ரசிப்பதற்கு காட்சிகள் எதுவும் இல்லையென்பதாலும், பகலின் கொடுமை யைத் தாங்க முடியாது என்பதாலும் எல் லோரும் மலையிலிருந்து இறங்கத் தொடங் கினர். மலை ஏறிய வேகத்தைவிட, இறங் கும் வேகம் அதிகரித்திருந்தது. இரவில் ஏறிய போது பாதை தெளிவுறத் தெரியவில்லை. ஆனால் இறங்கியபோது அனைத்தும் தெளி வாக இருந்ததால், சிரமமெதுவுமின்றி இறங்க முடிந்தது. ஏறுவதற்கு ஏறக்குறைய 4 மணி நேரம் பிடித்தது. ஆனால் இறங்குவதற்கோ இரண்டு மணி நேரமும் செல்லவில்லை.

- தொடரும்

**ஒக்டோபர் - 03 திரு/மட்.**
**மறைமாவட்ட இளைஞர் தினம்.**

## கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்


திருச்சபையைக் கட்டியெழுப்பும் பணி யில் அன்று கிறிஸ்துவின் 12 சீடர்கள் எவ்வாறு ஈடுபட்டனரோ அதைப்போன்றுதான் இன் றைய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியங்களும் கிறிஸ்துவின் பணியைப் புரிவதில் முழு ஆர் வத்துடன் செயல்படுகின்றன. இன்று திருச் சபையானது பல அப்போஸ்தலிக்க சபைகளை ஒவ்வொரு பங்கிலும் உருவாக்கியிருக்கின்றது. ஆனால் இளைஞர்களையும், யுவதிகளையும் வலுப்படுத்தி, ஆன்மீகத்தில் வளர்த்து, நாளைய திருச்சபையின் தூண்களாக மாற் றுவது எமது கத்தோலிக்க இளைஞர் ஒன்றி யமே. இன்று பங்கில் வளர்கின்ற கத்தோ லிக்க இளைஞர் ஒன்றியத்தினருக்கு பல சவால்கள் எழுகின்றது. அப்படியிருந்தும் இன்று ஒவ்வொரு பங்கிலும் மறை ஆசிரியர் கள், அசிப்பாக்குழு. இவற்றில் எல்லாம் முதன்மையாக விளங்குவதும், பாடுபட்டு உழைப்பதும் கத்தோலிக்க இளைஞர் ஒன்றி யமே. இதை ஒவ்வொரு இளைஞர்களும், யுவதிகளும், நன்கு உணர்ந்துகொள்ள வேண் டும். ஒரு பழமொழியுண்டு அதாவது காய்க் கின்ற மரத்துக்குத்தான் எப்போதும் கல்லெறி விழுவது. நாம் எமக்கு விழுகின்ற கல்லெறி களை யேசுவின் பாடுகளோடு ஒப்பிடும்போது இது ஒன்றும் எமக்குப் பெரிதல்ல. எனவே எமது பாதையும் தடைப்படாது. இன்று இன்று இளைஞர்களும், யுவதிகளும், கத்தோ லிக்க இளைஞர் ஒன்றியத்துக்கு வரும்போது ஒருவித பயம அவர்களிடம் காணப்படுகின் றது. ஆனால் காலப்போக்கில் இறைவனின் பணியை அன்புடன் புரிவதிலும், மற்றவர் களுக்கு முன்மாதிரியாக வாழ்வதிலும், மற்ற வர்களையும் வழிநடத்துபவர்களாகவும் உரு வாகின்றனர். ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் அடித்தளம் சரியாக அமைய வேண்டும். அப்படியிருந்தால்தான் வாழ்க் கையை திறம்பட அமைத்துக்கொள்ளமுடியும்

(24ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை-இலக்கிய மஞ்சரி



## முத்தமிழ் விழா

மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை நடாத்திய முத்தமிழ் விழா கடந்த செப்டம்பர் மாதம் 26ம் நாள் நடைபெற்றது.

தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் செ. புண்ணியமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கினார்.

கிழக்குப் பல்கலைக்கழக மெய்யியல்துறை விரிவுரையாளர் பேராசிரியர் சோ. கிருஷ்ன ராஜா சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

காலை முதல் மாலை வரை இடம்பெற்ற இவ்விழாவில் உரைகள், கவியரங்கம், கலை நிகழ்ச்சிகள், பரிசளிப்பு, கலைஞர் கௌரவம் மூத்த கலைஞர்களுக்கு விசேட விருதுகள் என பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஆக்க இலக்கியம், சித்த வைத்தியம், ஓவியம், இசை, சோதிடம் போன்ற துறைகளில் பங்களித்த ஐவர் கௌரவிக்கப்பட்டனர்.

வித்துவான் சா. இ. கமலநாதன், மாஸ்டர் சிவலிங்கம், திருமதி ரா. தட்சணாமூர்த்தி, ஆகியோர் விருதுபெற்ற மூத்த கலைஞர்கள் ஆவர்.

முத்தமிழ் விழாவையொட்டி 'தேனகம்' சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.

## 'சர்வ சமய சமரச விழா'

மட்டக்களப்பு கலை பண்பாட்டுக் களரி எதிர்வரும் மார்கழி மாதம் 'சர்வ சமய சமரச விழா' ஒன்றை நடத்தவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'சமயம், சமூகத்தின் முக்கியமானதொரு பண்பாட்டு அம்சம். இவ்வம்சம் சாரியான விதத்தில் புரிந்து கொள்ளப்படவும் மக்களிடையே அது தொடர்பான விழிப்பினை ஏற்படுத்திடவும் இச்சமய விழா பெரிதும் உதவும் என எதிர்பார்ப்பதாக' விழா ஏற்பாட்டாளர் கவிஞர் வாகரை வாணன் தெரிவித்துள்ளார்.

## நான் என்னைத் தேடுகிறேன்

'பெனி'யின் மற்றுமொரு கவிதைத் தொகுதியான 'நான் என்னைத் தேடுகிறேன்' வெளிவந்துள்ளது.

கடந்த ஜுலைத் திங்களில் 'நெருப்பு ஊர்வலங்கள்' கவிதைத் தொகுதியை வெளியிட்ட 'பெனி' ஒரு மாதத்தால் ஆகஸ்ட் திங்களில் மற்றுமொரு கவிதைத் தொகுதியை வெளியிட்டிருப்பதைச் சாதனை என்று சொல்ல முடியவில்லை. அவருக்குக் கிடைத்த வாய்ப்பும் வசதியும் அப்படி. ஆனால் அவரது கவிதைகள் சத்தானவை என்பதில் சந்தேகமே இல்லை. 'கவிதைக்கு அடிப்படை உணர்ச்சி' என்பார்கள். அந்த உணர்ச்சிகளின் குறுகுறுப்பு இவரது கவிதைகளில் குதித்துக் கொண்டு வருகிறது.

தன் உணர்வுகளை, தனது அனுபவங்களை, தன்னைச் சுற்றி நடப்பவைகளை, இயற்கையை அதில் ஒளிரும் தெய்வீகத்தை தத்துவார்த்மாக தரிசிக்கின்ற நெஞ்சம் இவருக்கு வாய்த்திருக்கிறது. அவை வசன கவிதையா எழுத்தில் வழிகின்றன.

'அனைவரும் படிக்க, சிந்திக்க, தியானிக்க ஏற்ற அருமையான நூல் இது.

16ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைசொல்லும் விவிலியம்

# தொடர்ந்து வந்த தண்டனை

★ செல்லத்துரை ஜெயராஜா

இஸ்ராயல் அரசனாக ஆகாப் அமர்ந்திருந்தபோது, நாபோத் என்னும் ஒரு சாதாரணமான குடிமகனின் திராட்சைத் தோட்டத்துக்கு ஆசைப்பட்டு, அதை அபகரித்துக் கொண்டான். இதற்கு உடந்தையாக இருந்து நாபோத்தை வஞ்சகமாகக் கொலை செய்தவள் ஆகாப்பின் மனைவி ஈசபேல். இதற்காகக் கொடுக்கப்பட்ட தண்டனையிலிருந்து இவர்கள் தற்காலிகமாகத் தப்பித்துக்கொண்டாலும், ஆண்டவர் உரைத்த வாக்கின்படி ஈசபேலும் ஆகாப்பின் தலைமுறையினரும் தண்டிக்கப்பட்டனர்.

இதற்கு ஏதுவாக ஆண்டவர் இறைவாக்கினர் எலிசாவை அழைத்து, யோசபாத்தின் மகன் ஏகூவை அரசனாக அபிஷேகம் செய்ய வைத்து, ஆகாப்பின் குடும்பத்தை அழிக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

ஏகூ அரசனாக இஸ்ராயலுக்குள் வருவதைக் கேள்விப்பட்ட ஈசபேல் தன்னை அழகுபடுத்திக்கொண்டு, மாடியிலிருந்தவாறே நகர வாயிலினூடாக வந்த ஏகூவை நோக்கி ''உன் தலைவனைக் கொலைசெய்துவிட்டு சிம்ரிக்கு நிகர் ஆனவனே! சமாதான நோக்கோடுதான் வருகிறாயா''? என்று கேட்டாள். அதற்கு ஏகூ, ''என் சார்பாக அங்கே இருப்பது யார்? என்று அதிகாரத்தோடு கேட்டான். ஈசபேலுடன் இருந்த இரண்டு சேவகர்கள் பயத்துடன் அவனைப் பார்த்தார்கள். ஏகூ அவர்களை நோக்கி, ''அவளைக் கீழே தள்ளி விடுங்கள்'' என்றான். அவர்களும் அப்படியே செய்ய, அவளுடைய உடல் மதிற் சுவரிலும் குதிரைகளிலும் மோதி இரத்தம் சிதறக் கீழே விழுந்தது. குதிரைகள் அவளை மிதித்துக் கொன்றன, அந்த உடலை நாய்கள் தின்றன. இவ்வாறு இறைவாக்கினர் எலியா வாயிலாக ஆண்டவர் உரைத்த தண்டனை நிறைவேறிற்று.

அதன்பிறகு ஏகூ சமாரியாவிலுள்ள ஆக்காப்பின் மைந்தர்கள் எழுபது பேரையும், அவர்களுக்குள்ளே ஒரு தலைவனை ஏற்படுத்திப் போர்க்களத்துக்கு அனுப்புமாறு கடிதம் எழுதினான். அவர்களைப் போர்க்களத்திற் போரிட வைத்துக் கொன்றுவிடுவதே அவன் எண்ணம். ஆனால் ஆகாப்பின் மைந்தர்கள் போர்புரிய மறுத்துவிட்டனர். அதனால் அவர்களின் தலைகளை வெட்டி அனுப்புமாறு நேரடியாகவே உத்தரவு பிறப்பித்தான். அதன்படி தலைகள் வெட்டப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டன. ஆகாப்பின் புதல்வர்களையும் அவனது குடும்பத்தில் எஞ்சியிருந்த அனைவரையும், ஆகாப்பைச்சார்ந்த பெரியவர்கள், அவனுடைய உற்ற நண்பர்கள், அர்ச்சகர்கள் அனைவரையும் வெட்டிவீழ்த்தினான். அப்போது ஏகூ, ''இவர்கள் எல்லோரையும் கொன்றது யார் தெரியுமா? ஆகாப்பின் குடும்பத்துக்கு எதிராகக் கடவுள் உரைத்த வாக்கில் எதுவும் பொய்யாகவில்லை. ஏனெனில் ஆண்டவர் எலிசாவின் மூலம் உரைத்த வாக்கை அவரே நிறைவேற்றினார்' என்றான்.

அன்பான பிள்ளைகளே! இந்தக் கதையின் மூலம் பாவங்கள் சாபங்களாகத் தொடரும் என்பதையும், அந்தப் பாவத்துக்கான தண்டனையை எத்தனை தலைமுறை சென்றாலும் நிறைவேற்றுவார் என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். அதற்கேற்ப நாமும் கடவுளுக்கு அஞ்சி, பாவத்தை விட்டு விடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடுகள்

## தூய டொமினிக் சாவியோ

★ மெற்றில்டா

இறைவன் படைப்பினில்தான் எவ்வளவு அதிசயங்களை நாம் காண்கிறோம். அவரது அழைப்பினில், அவரது தெரிவினில்தான் எத்தனை எத்தனை மர்மங்கள் அடங்கியுள்ளன அவரது நடைமுறைகள், செயல்கள் எதுவுமே எமது சிறிய அறிவுக்குள் எட்டுவது மிக மிகக் கஷ்டம். ஆனால், அவரது சித்தப்படி வாழ்வதே எமக்குத் தேவையானது. இறைவன் மரணத்தைக்கூடத் திட்டமிடுவது எவ்வாறென எம்மால் அறியமுடிவதில்லை. சிறு வயதிலேயே அச் சுழலுக்குள் அடங்குவதும் இறைசித்தமே. அப்படிப்பட்ட சிறு வயதிலேயே மரித்து இன்று புனிதர்களின் பட்டியலிலுள்ளோரின் டோமினிக் சாவியோவும் ஒருவராவர்.

### திருத்தம்

கடந்த செப்டம்பர் தொண்டனில் சுவடுகள் பகுதியில் இடம்பெற்ற புனிதரின் பெயர் டோமினிக் சாவியோ என்று தவறாகக் குறிக்கப்பட்டிருந்தது. சரியான பெயர் புனித டோமினிக் ஒவ் குஸ்மான் என்பதாகும். திருத்திக் கொள்ளும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம். தவறைச் சுட்டிக்காட்டிய அருள் தந்தை டோமினிக் சாமிநாதன் அவர்களுக்கு எமது நன்றி.

தூய ஜோன் பொஸ்கோ உதவி புரிந்த பல சிறுவர்களுள் டோமினிக் சாவியோவும் ஒருவர். இவர் தூய ஜோன் பொஸ்கோவால் மிக அதிகமாக அன்பு செய்யப்பட்டவர். இவர் தம் வாழ்க்கை வரலாறை அப்போதே எழுத ஆரம்பித்திருந்தார்.

இத்தாலிய நாட்டிலேயுள்ள "றிவா" எனுமிடத்தில் 1842ம் வருடத்திலே டோமினிக் அவதரித்தார். ஐந்து வயதான வேளையில் திருப்பலிப் பூசைக்கு உதவக் கற்றுக் கொண்டார். பன்னிரு வயதானபோது தூய ஜோன் பொஸ்கோவைச் சென்று சந்தித்துத் தாம் ஒரு குருவாக வரவிரும்புவதை அவரிடம் தெரிவித்தார். இதிலிருந்து இருவரும் நல்ல நண்பராகிவிட்டனர். டோமினிக்கைப் பிரசங்கியாகப் பயிற்றுவிக்கும் பொருட்டு கல்வி தொடர்ந்தது. இக் கல்விக்கூடத்தை ஆரம்பித்தவர் தூய ஜோன் பொஸ்கோதான்.

இவருடன் பாடசாலையில் கற்கும் மாணவர், இவரிடமிருந்த இரக்க குணத்தையும், சுறுசுறுப்பையும் கண்டு இவரிடம் அன்பு கொண்டனர். இவர் பாடங்களைக் கற்பதில் மிகக் கடினமாக ஈடுபட்டார். செபம் செய்ய மிகவும் விருப்பம் கொண்டிருந்தார். ஆனால், இவரது உடல் நிலை இவருடன் ஒத்துழைக்கவில்லை. அதனால், இருவருடங்களின் பின்னர் தமதில்லம் திரும்பவேண்டி ஏற்பட்டது.

டோமினிக் சில கட்டளைகளைத் தமது முதல் நன்மை பெற்ற தினமதிலே, தம் குறிப்புப் புத்தகத்தில் எழுதிவைத்திருந்தார். அவை வருமாறு:

1. நான் திவ்விய நன்மையை அடிக்கடி பெறுவதற்காகப் பாவசங்கீர்த்தனத்தைச் செய்யச் செல்வேன்.
2. நான் திருநாட்களைப் பரிசுத்தமாக அனுசரிப்பேன்.
3. இயேசுவும், மரியாளுமே என் மிக நல்ல நண்பர்கள்.
4. ஒரு பாவம் என்றாலும் செய்வதைவிட உயிர்துறப்பதை மேலாகக் கருதுகிறேன்.

16ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மேகங்கள்

★ மூதூர் அ. ச. பாய்வா

வடகிழக்கு வானமெங்கும்
சோக மேகங்கள் - அவை
எரிந்த தமிழ்ப் பிணப்புகையின்
பகைப் புலங்கள்
விடைதெரியா விழித்து நிற்கும்
விந்தை மேகங்கள் - யார்க்கும்
விடைபகரச் சக்தியில்லா
வெற்று மேகங்கள்.

பொட்டிழந்து ஏங்குகின்ற
விதவை மேகங்கள் - எங்கும்
பொலிவிழந்து காணுகின்ற
மழலை மேகங்கள்
பட்டினிக்குத் தீனியான
பகடை மேகங்கள் - வாழ்வில்
பவிசிழந்து பரிதவிக்கும்
அகதி மேகங்கள்.

கன்னிமணங் கழியாது
கனவு மேகங்கள் - அருங்
கற்பிழந்து சாலையிலே
கவலை மேகங்கள்
விடிவையெண்ணிக் காத்திருக்கும்
விடலை மேகங்கள் - யாவும்
மழைசொரிய வொண்ணாத
மனித மேகங்கள்

ஈனவெறி கொண்டவரின்
இனத்து வேஷங்கள் - மீறிக்
கோவணமும் இழந்துதலை
குனிந்த மேகங்கள் - ஆனால்
வானமது தாளிடிந்து
வீழ்ந்திலங்கைமேல் - தமிழ்
வாழமட்டும் பெய்தொருநாள்
ஓயும் மேகங்கள்.

இவை - மனித மேகங்கள்
இவை - மறவ மேகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே பாடல் என்னை உருக்கும்

★ றோஸ் ஜோசப்

நமது கிறீஸ்துவ மதங்களில் எல்லா வழிபாடுகளிலும் அழகான இனிமையான கீதங்கள் பாடப்படுகின்றன. ஏன்? ஆயிரக் கணக்கான ஒலி நாடாக்களும் தேவாலயங் களிலும் கிறீஸ்தவ இல்லங்களிலும் அதிகா லையிலும், சிலவேளை பகல் வேளையிலும் ஒலிக்கின்றன. இவையனைத்தும் கிறீஸ்தவர் களில் உள்ளங்களில் மகிழ்வையும் பக்தியை யும் ஏன் நிம்மதியையும் அள்ளித் தருகின் றன. எனினும் சில பாடல்கள் பாடப்பாட இனிப்பவை. உள்ளத்தை ஈர்ப்பவை. நம்மை மறக்கச் செய்பவை. அப்படியான கீதங்களில் என்னை உலுக்கிய பாடல் இது என நான் எண்ணுகின்றேன். எல்லாத் தேவாலயங்களி லும் இக்கீதம் பாடப்படுகிறதோ இல்லையோ நானறியேன். ஆனால் என் மனதிற்கு எந்த வேளையிலும் இனிக்கும் இப்பாடலை உங்க ளுக்கும் அறியத்தர விழைகிறேன். இதோ அந்தப் பாடல். இதை அருட்சகோதரி வசந் தமலர் அ. கா. எங்களுக்குச் சொல்லித்தந் ததாக எனக்கு ஞாபகம்.

பாடல்

உன்னை நான் புகழ்ந்திட
ஒருவரம் வேண்டினேன்
உன்னை அன்பு செய்திட
உன்னருள் தேடினேன்

உன் நாமம் பாடிடவும்
உனக்காக வாழ்ந்திடவும்
உன் அன்புத் துணையினை நான்
தினமும் நாடினேன் - உன்னை

1. உனையன்றி எனக்கென்று
வேறொரு தலைவனுண்டோ
நீயின்றி என்னிதயம்
நிறைவினையடைவதுண்டோ
கார்முகிலாய் என் வாழ்வில்
கருணை மழை பொழிபவனே
கனவிலும் நான் உனைமறவா
வரமொன்று தாருமையா - உன்னை



2. பாசத்தின் கண்கொண்டு
பாவியைப் பார்க்கையிலே
பாரமாய்த் தெரிவதில்லை
உன்கையில் எனைப்பொறித்தாய்
உன்தோழில் எனைச் சுமந்தாய்
உன்னருளின்றிப் பதிலன்பு செய்ய
எனக்கேது திறனையா - உன்னை

பார்த்தீர்களா? எவ்வளவு அன்பான ஆழ மான அர்த்தமுள்ள வார்த்தைகள்? புகழவும் அன்பு செய்யவும் அவர் (யேசுவின்) அன்பும் அருளும் எனக்குத்தேவை. ''என் வழியா யன்றி எவனும் மோட்சராட்சியம் சேரான்'' என்றருளிய என் இரட்சகரிடமே நான் அருள் வேண்டுகிறேன். அதுமட்டுமா? அவரையன்றி வேறு தலைவன் எனக்கில்லை. நிறைவு இல்லை. எனவே மழைபோல அருள்பொழி யும். நீ உனை மறவா ஒரு வரம் தா! நன வில் மாத்திரமல்ல கனவிலும் உனை மறவா வரம் தா எனக் கேட்கிறேன். இந்த அன் புக்கு ஆழ அகல முண்டா? அடுத்து பாசம் நிறைந்த இதயம் கொண்ட என் பரம தந் தைக்குப் பாவியான எனது பாவங்களின் சுமை தெரிவதில்லை. அதுபற்றி அவர் நினைப் பதில்லை. இதனால்தான் என்னை அவர் கையிற் பொறித்தது மட்டுமன்றித் தோளி லும் சுமந்து திரிகிறார். ஐயகோ! இந்தப் பாசத்திற்கு நான் தகுதி யுடையவனா? என் னால் இந்தப் பாசத்திற்கு நிகரான பதிலன்பு காட்ட முடியுமா? இது என் உள்ளத்தில் இடைவிடாது ஒலிக்கும் வினா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே கேள்வி ஒரே கேள்வி எந்தன் வாழ் விலே ''ஒரே பதில் ஒரே பதில் என் வாயிலே'' எனும் சினிமாப்பாடல் நினைவுக்கு வருகிறது. இந்தக் கேள்விக்குப் பதில்? உன்னருளின்றிப் பதிலன்பு செய்ய எனக்கேது திறனையா? அது எனது தாழ்ச்சியான வேண்டுதல். என் தலைவா உன்னருளினுக்கு பதிலன்பு தர பாவி என்னால் முடியாது. அந்தத் திறனை யும் நீயே தரவேண்டும் என்பது அவ்வடியில் மறைந்திருக்கும் மன்றாட்டல்லவா?

வாசக நெஞ்சங்களே! இப்படியான எத் தனையோ கத்தோலிக்கக் கிறீஸ்தவ கீதங் களை நாம் கேட்டுள்ளோம். பாடியுள்ளோம்! ஆயினும் இப்பாடல் என் மனத்தைக் கொள் ளைகொண்டது ஏன்? எனக்குப் புரியவில்லை. இக்கீதத்தை எத்தனை முறை பாடினாலும் எனக்கு அலுப்பு சோர்வு எழுவதில்லை. ''இசைக்கு இளகாதவன் கசைக்கும் இளக மாட்டான்'' என்பது பழமொழி. எனவே இப்படியான கீதங்கள் நம்மைத் தம் விருப் புப்படி அசைக்கின்றன. இப்பாடல் ஏன் என்னைச் சதா ஆட்டிப்படைக்கிறது. யோசிக்கிறேன்! முடிவு இல்லை, புரியவில்லை உங்களுக்காவது புரிகிறதா?

13ம் பக்கத் தொடர்ச்சி.........

இவர் தமது பதினைந்தாவது அகவை யிலே இறைபதம் எய்தினார். அவ்வேளை யிலே ''நான் எவ்வளவு அழகான விடயங் களைக் காண்கிறேன்'' எனக் கூறினார். இவரைத் திருச்சபையானது சிறுவர்க்கான பாதுகாவலராகப் பிரகடனஞ் செய்துள்ளது.

நாமும் இவரது முன்மாதிரியான வாழ் வைப் பின்பற்றிப் பாவமனைத்தையும் விட்டு விலகவும், தூய உள்ளத்தோடு இறையைச் சேவிக்கவும் இறையிடம் வரம் கேட்போம்.

11ம் பக்கத் தொடர்ச்சி.........

## மூன்று புத்தகங்கள் வெளியீடு

மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் (கொன்கொப்) இம்மாதம் (ஒக்டோபர்) இரண்டாம் திகதி மூன்று நூல்களை வெளியிட்டு வைத்தது. பூ. ம. செல்லத்துரை எழுதிய 'இலங்கைத் தமிழர் வரலாறும் இன்றைய நிலையும்' திக்கவயல் தர்மகுலசிங்கம் எழுதிய 'வரலாற் றில் தமிழும் தமிழரும்' மற்றும் மொழி பெயர்ப்பான 'சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்'.

மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற வெளியீட்டு விழாவுக்கு கிழக் குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையா ளர் கலாநிதி S. இரவீந்திரநாத் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். அவர் தமது உரையில் வரலாற்றை திரிவுபடுத்தும் வகுப்பாத இயக்கங்களின் கருத்துகளுக்கு சரியான மறுப்புகள் பல்கலைக்கழக புத்தி ஜீவிகளால் முன்வைக்கப்பட வேண்டும். இல் லையேல் திரிபுகளே உண்மையாகிவிடும் என் றார். மேலும் அவர் பேசுகையில் வரலாற்று நூல்களை எழுதும்போது மிகவும் கவனமாக எழுதவேண்டும். நாம் மேலோட்டமாக சாதாரணமாக எழுதிவிடுவதை நமக்கு எதி ராகவே திருப்புகின்ற முயற்சிகளில் பேரின வாத அமைப்புகள் ஈடுபடுகின்றன என்றார். கலாசார உத்தியோகத்தர் K. தங்கேஸ்வரி கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பாலா. சுகுமார் ஆகியோர் ஆய்வுரைகள் நிகழ்த்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவான நிறைவு விழா

★ செல்லத்துரை ஜெயராஜா

மனிதனோடு முதல் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டவர் இறைவன். அந்த அன்பையும் அவர் கொடுத்த மீட்பின் செய்தியையும் மனிதன் உலகம் அனைத்துக்கும் அறிவிக்கக் கடமைப்பட்டவன். அந்த வகையில், மட்டக்களப்பு, சமூகத் தொடர்பு நிலையம் ஆற்றிவரும் இறைதூதுப் பணி அனைவரும் அறிந்த விடயம். இந்தப் பணியில் பல முன்னேற்றங்களைக் கண்டுவிட்ட இந் நிலையம் அண்மையில், 'புதிய' உலகம் கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சியின் 25வது வெள்ளி விழா ஆண்டில் ஆயிரமாம் மலர் நிறைவதைச் சிறப்பித்து மகிழ்ந்தது; இறைவனுக்கு நன்றி விழாவெடுத்து நெகிழ்ந்தது.

கடந்த செப்ரம்பர் மாதம் 25ம் நாள் சனிக்கிழமை, மட்டக்களப்பு, அருள் ஒளி இல்லத்தின் ஹென்றி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில், சமூகத் தொடர்பு நிலைய இயக்குனர் அருட்பணி A. தேவதாஸன் அடிகளும், நிலையத்தின் பொறுப்பாளரும், வானொலி நிகழ்ச்சித் தொகுப்பாளருமான திரு. மலர்வேந்தன் அவர்களும், இந்த நிலையத்தின் முதலாவது இயக்குனராகப் பதவி வகித்தவரும் சிறந்த ஊடகத் தொடர்பாளருமான அருட்பணி நோபர்ட் A. ஒக்கஸ் அடிகளும், மட்டக்களப்பு மாநகர சபை முன்னாள் முதல்வரான திரு. செழியன் J. பேரின்பநாயகம் அவர்களும், அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட திரு. ராஜன் அவர்கள் தமது துணைவியாரோடும் கலந்து சிறப்பித்தனர். மேலும், இருபத்தைந்து ஆண்டுகளாக இந்தவானொலி நிகழ்வுகளில் பங்குகொண்டு உழைத்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், நடிகர்கள், பாடகர்கள், படைப்பாளிகள், ஓவியர்கள் பலரும் கலந்துகொண்டது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். எனினும், கால நிலை, பாதுகாப்பு மற்றும் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இவ் விழா சுருக்கமாகவும் அமைதியாகவும் குறிப்பிட்ட சிலருடைய பிரசன்னத்துடனும் நடைபெற வேண்டியதாயிற்று.


காலை 10-30 மணிக்கு அனைவரும் ஒன்றுகூடிய பின்னர், இல்லத்தின் ஜெபக் கூடத்தில், 10-45க்குத் திருப்பலி ஆரம்பமானது. இயக்குனர் அவர்களும் அருட்பணி நோபர்ட் அடிகளும் இணைந்து திருப்பலியை நிறைவேற்றினார்கள். பாடல்கள், முன்னுரை வாசகங்கள், வேண்டுதல்கள் யாவற்றிலும் வானொலிக் கலைஞர்களே பங்குபற்றிச் சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து, ஹென்றி மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் திரு. மலர்வேந்தன் உரையாற்றும்போது, புதிய உலகத்தின் தோற்றத்தையும், அதற்குக் கால்கோலாக விளங்கியவர்களையும், அதன் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் வெகு அழகாக விளக்கிவைத்தார். அடுத்து உரையாற்றிய அருட்பணி நோபர்ட் அடிகள், தமது வானொலி அனுபவங்களையும் வினைவுகளையும் எடுத்துக்கூறினார். அவரைத் தொடர்ந்து உரையாற்றிய மாநகரசபை முன்னாள் முதல்வர் அவர்கள், தொடர்புகள் எவ்வாறு ஏற்படுத்தப்படுகின்றன, அவை எவ்வாறு திரிபடைகின்றன, சரியான தொடர்புகளை எப்படி ஏற்படுத்துவது என்பதை அவருக்கே உரிய பிரதேச மொழி வழக்கில் அழகாகவும் ஆழமாகவும் சொல்லிவைத்து சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தார். இறுதியாக இயக்குனர் அவர்களின் முடிவுரையான நன்றியுரையோடு கூட்டம் நிறைவெய்தியது.

இந்தக் கூட்டத்தை அடுத்து அனைவரும் மதிய உணவில் கலந்துகொண்டனர். சுய சேவை முறையில் உணவைத் தாங்களே பரிமாறிக்கொண்டதோடு, புதிய உலகத்திற்குத் தங்களின் பங்களிப்பையும் அனுபவங்களையும் பரிமாறிக்கொண்டும் உணவருந்தினார்கள். இந்த . விழாவில் பங்குகொண்டவர்கள் அனைத்தும் நிறைந்தவர்களாக அனைவரையும் பாராட்டி மகிழ்ந்து விடைபெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபைச் செய்திகள்



## திருத்தந்தையின் இந்தியப் பயணம்

★ வரும் நவம்பர் 5 முதல் 8 வரை திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் புதுடில்லிக்குத் திருப் பயணம் மேற்கொள்ள இருப்பதை முன்னிட்டு கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இந்திய அரச அதிகாரி ஒருவர் கூறினார். திருத்தந்தை செல்லவிருக்கும் ஏழு இடங்களிலும் 24 மணி நேரத்துக்கு முன்னே கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, நிகழ்ச்சி இடம்பெறும் 3 மணி நேரத்துக்கு முன்னர், மற்றொரு பரிசோதனை இடம்பெறும் என்று அதிகாரிகளுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளை கவனிக்கும் உதவி கடற்படைத் தலைவர் ஜோன்டி சில்வா கூறினார். கடும் பாதுகாப்பு நடவடிக்கை இருக்கின்றபோதிலும் பொதுமக்கள் திருத்தந்தையை வாழ்த்துவதற்கு வாய்ப்புக்கள் கொடுக்கப்படும் என்றும் டிசில்வா குறிப்பிட்டார்.

## ஆர்மீனியப் பிதாப்பிதா மரணம்

★ ஆர்மீனிய கத்தோலிக்க திருச்சபையின் பிதாப்பிதா 1ம் கார்க்கின் சார்க்கிசியன் ஜூன் 29ம் திகதி காலமானார். அவரது மரணத்தைப்பற்றி கேள்வியுற்ற திருத்தந்தை தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து தாம் அவரைச் சந்தித்தபோது அவரது ஆன்மீக உயர்வையும் திருச்சபையின் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றையும் சகல கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் ஒரே மந்தையில் ஒன்றிப்பது குறித்து அவரது கரிசனையையும் தாம் கண்டுணர்ந்ததாகக் கூறினார்.

## பரந்த அணுகுமுறை தேவை

★ விசுவாசத்துக்கும் கலாசாரத்துக்கும் இடையிலான தொடர்பு பற்றி கடந்த ஜெனவரி மாதம் தாய்லாந்தில் நடந்த ஒரு சிறப்புப் பேரவையின் ஆய்வுகளைத் தொடர்ந்து திருத்தந்தையின் ஆட்சிபீடம் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் ஆசிய கலாசாரங்கள் மட்டில் திருச்சபை ஒரு பரந்த மேய்ப்பு அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய ஆசிய நாடுகளின் ஆயர்களுடன் நடத்திய ஆலோசனைகளின் விளைவாகவே இவ்வறிக்கை வெளியிடப்பட்டது.

## ஆபிரகாம் பிறந்த 'ஊர்'

★ திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் திருப்பயணம் மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படும் ஈராக்கின் 'ஊர்' நகரைப் புதுப்பிப்பதற்கு ஈராக் தலைவர் சதாம்உசேன் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று பாக்தாத் தினத்தாள்கள் கூறின. புதுப்பித்தலுக்கென ஒரு குழு உருவாக்கப்பட்டிருப்பதாகவும், இக்குழு புதுப்பித்தலுக்கான செலவு மற்றும் விபரங்களை சமர்ப்பிக்கும் எனவும் அத்தினத்தாள்கள் அறிவித்தன. பாக்தாத்துக்குத் தெற்கே 400 கிலோ மீட்டரில் பாலைவனப் பகுதியில் உள்ள 'ஊர்' பழைய ஏற்பாட்டின்படி பிதாப்பிதா ஆபிரகாம் பிறந்த ஊராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனிதர் பட்டம்

★ திருத்தந்தை கடந்த ஜூன் மாதம் போலந்துக்கு சென்றிருந்த போது 13ம் நூற்றாண்டில் அங்கு ஆட்சி செய்த கிங்கா என்னும் அரசிக்கு புனிதர் பட்டம் அளித்தார். புனித கிங்கா ஹங்கேரி நாட்டு மன்னர் 4ம் பெலாவின் மூன்றாவது மகளாவார்.

தமது கணவரோடு இணையாக ஆட்சி புரிந்த கங்கா மக்களின் நல்வாழ்வுக்குத் தம்மை அர்ப்பணித்து தமது செல்வங்களை எல்லாம் ஏழைகளுக்காகச் செலவிட்டவர்.

கிங்காவும் அவர் கணவரும் கன்னிமையோடு வாழ்வதாக வாக்குத்தத்தம் செய்திருந்தபடியால் அவர்களுக்குப் பிள்ளைகள் இருக்கவில்லை. நாட்டு மக்கள் அனைவருக்கும் அவர் தாயாகவிளங்கினார்.

40 வருட மணவாழ்வின் பின் கணவர் இறந்தபோது கிங்கா தமது அரசுரிமையைத் துறந்து ஒரு சந்நியாச மடத்தை நிறுவினார். எட்டு ஆண்டுகள் அங்கு தங்கியிருந்தபின் தாமும் அம்மடத்திற் சேர்ந்து துறவியானார். 1292ம் ஆண்டு தமது 58வது வயதில் மரணமானார். புனித மாக்கிரட் முத்திப்பேறுபெற்ற யோலன்டா என்பவர்கள் கிங்காவின் மூத்த சகோதரிகளாவர்.

## பாகிஸ்தானில் கிறீஸ்தவம்

★ பாகிஸ்தானில் சிறுபான்மையினராக வாழும் கிறீஸ்தவர்கள் தங்கள் விசுவாசம் குறித்து ஆழமான விசுவாசம் கொண்டிருக்க வேண்டுமென அந்நாட்டில் அண்மையில் இடம்பெற்ற விவிலிய வகுப்பில் விண்ணப்பிக்கப்பட்டது. பெரும்பான்மையினராக இருக்கும் இஸ்லாமியரின் மத பாரம்பரியத்தால் பாகிஸ்தான் கிறீஸ்தவர்கள் பாதிக்கப்படும் நிலையிருப்பதால் தங்கள் மதத்தைக் குறித்து ஆழமான அறிவைக் கொண்டிருக்க வேண்டும் என்றார் கராச்சியின் மறைக்கல்வி நிலைய இயக்குனர் இம்மானுவல் நேனோ. ஒரு மாத விவிலியப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டோருக்கு உரையாற்றிய கராச்சிப் பேராயர் கின்னியன் பெரேரா திருச்சபையின் இரு தூண்களான விவிலியத்தையும் பாரம்பரியத்தையும் கிறிஸ்தவ விசுவாசம் தன் அடிப்படையில் கொண்டுள்ளது என்றார். மனித மொழியில் எழுதப்பட்டுள்ள விவிலியம் மாண்புடன் வாசிக்கப்பட்டு அதன் மூலம் கடவுள் நமக்கு என்ன சொல்ல வருகிறார் என்பது புரிந்து கொள்ளப்படவும் வேண்டும் என்று உரையாற்றினார் பேராயர்.

## கிறீஸ்தவ ஐக்கியம் தேவை

★ நேபாளத்தின் கிறீஸ்தவ சபைகளுக்கான புதிய ஐக்கிய அவை, ஒன்றிணைந்த பணிகளுக்கான நான்கு புதிய விதிகளை அறிவித்துள்ளது. நட்பைக் கட்டி எழுப்புதல், கிறீஸ்தவ மறைப்பணிகளில் ஒத்துழைப்பு, விவிலிய ஆய்வு, செபமும் பகிர்தலும் என்ற நடைமுறைகளை அனைத்துக் கிறீஸ்தவ சபைகளும் பின்பற்ற வேண்டுமென வலியுறுத்தும் நேபாள கிறீஸ்தவ ஐக்கிய அவை, மனித உரிமைகளுக்காகப் போராடவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துகின்றது. இக்கிறீஸ்துவ ஐக்கிய அவைக்கூட்டத்தில் உரையாற்றிய புரட்டஸ்தாந்து கிறீஸ்துவ சபைக் குரு அப்தியேல் மூக்கியா கிறீஸ்துவர்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாய் இருப்பதாலும் அனைத்து கிறீஸ்தவ சபைத் தலைவர்களும் ஒன்றிணைந்து செயல்படுவது அவசியம் என வலியுறுத்தினார். நேபாளத்தில் 2 கோடி 50 இலட்சம் மக்கள் தொகையில் 5000 பேரே கத்தோலிக்கர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக நோக்கில் திருமணம் - விவாகரத்து விளைவுகள்
## - தொடர் -

முறிவுத் திருமணங்கள் ஏற்படுத்தும் விளைவுகள்:

கணவனோ அல்லது மனைவியோ சமுதாயத்தில் குடும்பத்தின் சுய கௌரவம், நம்பிக்கை என்பன இழந்து பயங்கர குற்ற உணர்வுடனும், விரக்தியுடனும் காணப்படுவதால், இவர்கள் சிறந்த குடும்ப வாழ்க்கை நடத்துபவர்களாகக் கண்டவுடன் ஒருவித பொறாமை உணர்வினால் உந்தப்பட்டு மற்றவர்களுடன் சேர்ந்து வாழாமல் தனியாகவே வாழவிரும்புவார்கள். தனிமை எனும்நோய் இவர்களை வாட்டும்போது தமது பிரிவுக்கான காரணங்கள் பற்றிச் சிந்திக்கத் தொடங்குகின்றனர். மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் வருந்துவதால் தமது திருமணத்திற்குக் காரணமாயிருந்தவர்களையும், முன்னின்று நடத்தியவர்களையும் கண்டவுடன் ஆத்திரமும் கோபமும் கொண்டு அவர்களை எதிர்காலத்தில் நம்பாது வாழ முடிவெடுக்கின்றனர். கவலையைத் தீர்க்கப் போதை வஸ்துபோன்ற தீயவழிகளை நாடுகின்றனர். தன்னை ஏமாற்றிய ஒரு கணவன் அல்லது மனைவி இருப்பதாக ஓர் உணர்வு மேலேழுகின்றது.

இத்தகையோரின் பிள்ளைகளது எதிர்காலம்கூட தெளிவற்றதாக, இலட்சியம் அற்றதாக, இருள் சூழ்ந்ததாக மாறுகிறது. கைவிடப்பட்டவர்கள், வேண்டப்படாதவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மை இவர்கள் மத்தியில் வளர்வதோடு குற்ற உணர்வும் கூடவே இழையோடுகின்றது. இந்த வேளையில் இத்தகைய பிள்ளைகள் மன அதிர்ச்சிக்கு (Trauma) உட்பட்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். தாய் தம்மைப் பிரிவது இருக்கத் தாமும் ஏதாவதொரு வகையில் காரணமறியாத ஒரு பயம் (Sub-conscious fear) இவர்களை ஆட்கொள்கிறது.

சரியானது செய்தால் தட்டிக்கொடுக்கவும், என்ற எண்ணத்தினால், எப்படியும் வாழலாம் என்றெண்ணித் தமக்குள்ளேயே புதிய, ஆனால் தவறான கொள்கைகளை உருவாக்கிச் சமுதாயத்தின் கண்முன் குற்றவாளிகளாய் உலவுகின்றார்கள்.

இத்தகைய சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க அனைவரினதும் ஒத்துழைப்பும் தேவை அரசும், தனியாரும் இணைந்து அல்லது தனித்தனியே, இத்தகைய பாதிப்புற்றவர்களுக்கென, சில அமைப்புகளை ஏற்படுத்தி, மனோதத்துவ நிபுணர்கள் மூலம் ஆலோசனைகள் வழங்கவேண்டும். கருத்தரங்குகள், கண்காட்சிகள் மூலம் குடும்பம் பிரிவதனால் ஏற்படும் பாரிய விளைவுகளை எடுத்துக் காட்டவேண்டும். போதுமான, சரியான காரணங்கள் இருந்தால் மட்டுமே விவாகரத்து வழங்கல் வேண்டும். பாடசாலைகள் தோறும், அடிப்படைப் பாலியல் கற்பிக்கப்படல் வேண்டும். திருச்சபையும் குடும்ப வாழ்வின் மகத்துவத்தைப் படிப்பிப்பதுடன் திருமணம் செய்யவிருப்பவர்களின் பெயர் விபரங்களை முன்னமே அறிவித்து, திருமணம் செய்யவிருப்பவர்களை (Fre-Cana) போன்ற விசேட வகுப்புகள் மூலம், திருமணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும்.

எல்லாவற்றையும் விட, குடும்பத்தில் எவ்வளவுதான் கஷ்டமோ, பிரச்சினையோ வந்தாலும், விவாகரத்து மூலமே இவற்றுக்கு விடைகாண முடியுமென்ற எண்ணத்தைக் கைவிட்டுக் கணவனும் மனைவியும் ஒருவரோடு ஒருவர் புரிந்துணர்வுடன் கலந்துபேசி நிறை, குறைகளை உடனே சீர்தூக்கிப் பார்த்து, வீண் பிரச்சினைகள் எழாமல் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு கணவன், மனைவி, பிள்ளைகள் ஒருவரை ஒருவர் மதித்து, மன்னித்து, அன்புசெய்து வாழ்ந்தால், இனிவரும் மனித வாழ்க்கையின் அகராதியிலே விவாகரத்து எனும் சொல்லை இல்லாமல் ஒழித்தும், அழித்தும் விடலாம்.

முற்றும்.

அருட்திரு பேதுரு ஜீவராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பை எதிரொலித்த கோணகல

திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டத்தின், அம்பாறை மாவட்டத்துள் அடங்கிய கோணகல கிராமத்தில் குடியேற்ற வாசிகள் ஐம்பதுபேர் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்ட செய்தி நெஞ்சைத் துணுக் குற வைத்துள்ளது,

நாளும் வாழ்வோடு போராடிக் கொண் டிருக்கும் அப்பாவிப் பொதுமக்கள் நட்ட நடு நிசியில் வெட்டிக் கொல்லப்பட்டதை நாம் எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

உரிமைக்கான ஆயுதப் போராட்டமும், சமாதானத்துக்கான ஆயுதப் போராட்டமும் கொடுக்கின்ற மிகப்பெரிய விலை மனித அழிவுதான்.

உடைந்த வீட்டைக் கட்டிவிடலாம்
பிடுங்கிய மரத்துக்காய் (வேறு) மரங்களை நட்டுவிடலாம்
வீழ்ந்த பொருளாதாரத்தை நிமிர்த்திவிட லாம்
மாண்டுபோன மனித உயிர்களை மீட்க முடியுமா?
வாழத்துடிக்கும் மனித வேட்கையை ஆயுதத் தால் பிடுங்கும் உரிமையை யார் கொடுத்தது?

கோணகல சம்பவம் புதுக்குடியிருப்புப் படுகொலையின் எதிர் விளைவு என்று கூறப் படுகிறது. அங்கும் சந்தைப்பகுதிக்குள் அப் பாவிப் பொதுமக்கள் மீது இடம்பெற்ற குரோதம் நிறைந்த குண்டு வீச்சால் இருப துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டும் இன் னும் பலர் காயமடைந்தும் உள்ளனர். இந்த அநியாயப் படுகொலை பள்ளமடு ரணகோஷ இராணுவ நடவடிக்கையில் ஏற்பட்ட படு தோல்வியின் எதிர்விளைவு என்று கூறப்படு கிறது.

அழிவின் எதிர்விளைவுகள் எல்லாம் தொடர் அழிவுகளையே உற்பத்தி செய்கின் றன என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். கோணகலயும், புதுக்குடியிருப்பும் நமக்குப் புதிதல்ல. இந்நாட்டில் தலைவிரித் தாடும் இனவாதம் எத்தனையோ 'கோண கலையையும்' 'புதுக்குடியிருப்பையும்' கண்டு விட்டது. அவ்வப்போது கண்டனங்களும், அனுதாப அறிக்கைகளும், சமாதான வேண் டுதலும் விடுக்கப்படுவது நமக்கும் பழகிப் போனதுதான். இவைகள் இந்த அழிவுகளைத் தடுத்து நிறுத்தி விடுமா? இல்லை என்பதற்கு அரசின் நடவடிக்கைகளே சான்றாகின்றன.

புதுக்குடியிருப்பில் அப்பாவி மக்கள்மீது நிகழ்த்தப்பட்ட விமானக் குண்டு வீச்சை இன்றுவரை உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொள்ளாத அரசாங்கம், கோணகலையில் பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல்கூறி, நட்ட ஈடுதந்து, பாதுகாப்புத்தந்து கூடவே படைக் கலன்களும் கொடுக்கிறது. மக்களை ஆயுத வாழ்வுக்குப் பழக்கப்படுத்தும் ஒரு நாட்டில் அழிவுகளைத் தடுக்க முடியுமா?

ஆயுதங்களில் நம்பிக்கை இருக்கும் வரை புதுக்குடியிருப்புகளும், கோணகலைகளும் தோன்றத்தான் போகின்றன.

உரிமைகளைப் பெற ஆயுதப் போராட் டமே வழி என்பவர்களும், போராட்டத்தை ஒடுக்க இராணுவ நடவடிக்கையே சரி என் பவர்களும் தமது கருத்தை மாற்றிக் கொள் ளாதவரை மனித வாழ்வு இந்நாட்டில் அவ லம் நிறைந்த தாகவே இருக்கப் போகின்றது.

கருத்து மாற்றத்தை கல்வியினூடாக, சிந்தனையினூடாக, அனுபவங்களினூடாக பெறக்கூடிய வாய்ப்பு இந்நாட்டில் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது தெளிவாகிவிட்டது. அது ஒரு நெருக்குதலின் ஊடாகவே இடம்பெற முடியும். ஒரு ஜனநாயக நாட்டில் நெருக்குதலைக் கொடுக்கக் கூடியவர்கள் மக்களே. அம்மக்கள் பெரும்பான்மை சிறுபான்மை என்று பிளவுண்டு கிடக்கிறார்கள். ஜனநாயகம் என்பது பெரும்பான்மையைப் மையப்படுத்தியது. அப்பெரும்பான்மை பேரினவாதமாக உருவெடுத்திருக்கும் நாட்டில் ஜனநாயகம் பேரினவாதத்தின் கருவியாகவே செயல்படும். அவ்வேளையில் சிறுபான்மையினங்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஜனநாயகக் கட்டமைப்பு சக்தியிழந்து போகிறது. அதனால்தான் பாராளுமன்ற ஜனநாயக அமைப்புக்குள் இந்நாட்டு இனப்பிரச்சினையைத் தீர்க்க நீண்டகாலமாகப் போரடிய தமிழ்த் தலைமைகள் தோற்றுப்போயின.

ஜனநாயகம் தோற்றுப்போகும்போது அது ஆயுதப் போராட்டமாக மாறுவது வரலாற்றுப் போக்கில் இடம்பெறும் இயல்பான மாற்றமே. ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலும் நாம் இதே நிலையைக் காணுகிறோம். ஆகவே, இலங்கையின் ஒற்றையாட்சி ஜனநாயக அமைப்பு, சிறுபான்மை இனங்களின் தலைவிதியை பெரும்பான்மை ஜனநாயகம் தீர்மானிக்கும் ஆட்சிமுறை இனப்பிரச்சினையைத் தீர்த்துவிட இயலாது, அழிவுகளைவும் தடுத்துவிட முடியாது.

இராணுவ நடவடிக்கையை நிறுத்தும். ஆயுதங்களை கீழே வைக்கத் தூண்டும் ஒரு நெருக்குவாரம் ஓர் அனைத்துலக அமைப்பினூடாக வரவேண்டும். அதன் மேற்பார்வையில் உருவாக்கப்படும் தீர்வு சிறுபான்மை இனங்கள் தமது தலைவிதியை தாமே தீர்மானிக்கக் கூடியதான ஆட்சி முறையொன்றைக் கொண்டதாக அமையவேண்டும். அத்தகைய நெருக்குவாரத்தை ஏற்படுத்த, ஆக்கபூர்வமாகச் செயற்பட மனிதவாழ்வில் அக்கறைகொண்ட, சமாதானத்தை விரும்பும் சமய, சமூகநல அமைப்புகள் முன்வருமா?

**மலர்வேந்தன்**

## நெஞ்சில் நிற்கும் சிவதாசன் மறைந்த ஈராண்டு நிறைவு

கலை இலக்கிய ஆர்வலரும், வெளியீட்டாளரும், அச்சக உரிமையாளருமாக விளங்கிய திரு. A. சிவதாசன் அவர்கள் மறைந்து ஒக்டோபர் ஏழாம் திகதியுடன் இரண்டு ஆண்டுகளாகின்றன.

திரு. சிவதாசன் ஓர் அரச உத்தியோகத்தர், தொழில் அதிபர் என்னும் வெளி அடையாளங்களுக்கப்பால் சமூக இலக்கிய ஆர்வமும், பெருந்தன்மையும் மிக்க கலைஞர். மட்டக்களப்பு எழுத்தாளர்களுக்கு இலக்கிய ஆர்வலர்களுக்கு பயனுள்ள விதத்தில் ஏதாவது செய்யவேண்டும் என்ற நோக்கம் அவருக்கிருந்தது. அதன் விளைவுதான் அவரது நாவல், சஞ்சிகை வெளியீட்டுத் திட்டம். அவைகளை நீண்ட காலத்துக்குத் தொடர முடியாமற் போனாலும் சில ஆண்டுகளாவது செய்ய முடிந்தது ஒரு சாதனைதான். இவை திரு. சிவதாசனால் அன்றி மற்றவரால் செய்யக்கூடியவை அல்ல.

தேனீ போன்ற சுறுசுறுப்புடன் அவர் இயங்கினார். வேலை செய்வதிலும் சரி, வேலை வாங்குவதிலும் சரி அவர் கெட்டிக்காரர். அவரைப்போன்று கச்சிதமாகத் திட்டமிட்டு செயற்படுகின்றவர்களைக் காண்பது அரிது. அனைத்தையும்விட பெருந்தன்மையோடும், நட்போடும் பழகுகின்ற சிறந்த பண்பு அவருக்கிருந்தது.

பல காரணங்களால் அவர் மட்டக்களப்பிலிருந்து குடிபெயர்ந்தபோது அது ஊருக்கும் உள்ளத்துக்கும் பெரியதொரு இழப்பாகவே இருப்பதை நான் உணர்ந்தேன். ஆயினும் மீண்டும் மட்டக்களப்புக்கு வந்தபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அவரும் பல திட்டங்களோடுதான் வந்திருந்தார். ஆனால் காலம் முந்திக்கொண்டது.

திரு. சிவதாசன் அவர்கள் பிரிந்து ஆண்டுகள் இரண்டாகிவிட்டன. அவரைப்பற்றிய நினைவுகள் இன்னும் எனக்குள் பசுமையாகவே இருக்கின்றன.

மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலிய பொது அறிவுப் போட்டி - 43

1. ஊசு என்னும் நாட்டில் வாழ்ந்த நீதிமான் யார்?

..................................................................................................................

2. மோசேயும் இறைவாக்கினர்களும் அவர்களுக்கு உண்டு - இவ்வசனம் யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

..................................................................................................................

3. 'நன்மைசெய்வதில் மனம் தளராதிருப்போமாக' இவ்வசனம் திருநூலின் எந்தப் புத்தகத்தில் எத்தனையாம் அதிகாரம் வசனங்களில் காணப்படுகிறது. (காண் - திருமுகங்கள்)

..................................................................................................................

4. இறுதியாக நடந்து முடிந்தது எத்தனையாவது தெற்காசிய விளையாட்டு விழா?

..................................................................................................................

5. எதிர்வரும் 2000மாம் ஆண்டு அனைத்துலக ரீதியில் என்ன ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது?

..................................................................................................................

6. நாளமில்லாச் சுரப்பிகளில் உடல் வளர்ச்சிக்குக் காரணமாயிருக்கும் சுரப்பி எது?

..................................................................................................................

பெயர்.......................................................................

முகவரி.......................................................................

.......................................................................

.................................... இங்கே வெட்டவும் ....................................

**போட்டி விதிகள்**

போட்டியில் ஆறு வினாக்களுக்கும் சரியான விடைகளை அளிப்போர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு ரூபா 100/- பரிசாக வழங்கப்படுவதோடு ஐந்து வினாக்களுக்கு, நான்கு வினாக்களுக்கு மூன்று வினாக்களுக்கு மட்டும் சரியான விடைகளை அளிப்பவர்களில் தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவருக்கும் முறையே 75/- 50/- 25/- ஆகிய பரிசுத் தொகைகள் வழங்கப்படும்.

போட்டியில் அனைவரும் பங்குபற்றலாம். ஆனால் தொண்டனில் வெளிவரும் கூப்பனில் அனுப்பப்படும் விடைகள் மட்டுமே போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். ஒருவர் எத்தனை கூப்பனை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

விடைகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள்: 15-11-99

முகவரி: விவிலிய பொது அறிவுப் போட்டி - 43,

தொண்டன், அ. பெ. எண். 44, மட்டக்களப்பு. 30000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலிய - பொது அறிவுப் போட்டி 41 - விடைகள்

1. ஆரோனும் அவர் புதல்வரும் (1 குறிப்பேடு 23/13)
2. இயேசு நிக்கோதேமுக்குக் கூறியது (யோவான் 3/10)
3. கொலோஸசயர் 2/8
4. கார்க்கில் பிரதேசம்
5. அப்துல்லா ஒக்லன்
6. கலையரசு சொர்ணலிங்கம்

**பரிசு பெறுவோர்:**

ரூபா 100/- — பரிசுக்குத் தெரிவாகவில்லை.

ரூபா 75/- — ஆஞ்சலா பெர்னான்டோ,
இல. 1, எல்லை வீதி தெற்கு,
தாண்டவன்வெளி, மட்டக்களப்பு.

ரூபா 50/- — J. A. M. ஜஸ்மின்,
6/129, சொறிக்கல்முனை,
சம்மாந்துறை.

ரூபா 25/- — இ. கத்தறின் சுவர்ணி,
புனித திரேசாள் ஆலயம்,
வாழைச்சேனை.

பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள் - இ. ஆ.

---

(10ம் பக்கத் தொடர்ச்சி)

அதனை முக்கியப்படுத்தியே இன்றைய இளைஞர்களுக்கு வாழ்வின் சரியானதும், உறுதியானதுமான அடித்தளத்தை அமைத்துக் கொடுப்பதற்கு இன்றைய எமது கத்தோலிக்க இளைஞர் ஒன்றியங்கள் அயராது திறம்பட உழைக்கின்றன. ஒரு வாழைமரத்தைப் பார்த்தோமென்றால் எமக்கு பயனை தந்துவிட்டு தனக்குப்பின் எமக்குப் உதவிசெய்ய குட்டிகளையும் தருகின்றது. அதைப் போன்றுதான் நாம் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தில் இருக்கும்போது எப்படி பலன் கொடுத்தோமோ அதைப்போன்று நாம் அதைவிட்டு விலகும்போது இன்னொருவரை உருவாக்க வேண்டும். அதனால்தான் இன்றும் எமது கத்தோலிக்க இளைஞர் ஒன்றியங்கள் பல கிளைகள்விட்டு பரந்து பயனுள்ள மரமாக வளர்ந்திருக்கின்றன. இன்னும் பலரை வளர்த்துக் கொண்டு இருக்கின்றன. இனி வரும் காலங்களிலும் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் திறன்பட பலன் கொடுக்கும் என்பதில் எமக்கு பரிபூரண நம்பிக்கை. இறை சேவையில் இறைவனைக் காண்கிறோம்.

நன்றி !

**வி. வனஜா**
பேராலயப் பங்கு
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆயர். வ. தியோகுப்பிள்ளை அவர்களுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம்

ஓய்வு பெற்ற யாழ் ஆயர் பேரருள் திரு. வ. தியோகுப்பிள்ளை அவர்களின் பலதரப்பட்ட சேவைகளைப் பாராட்டி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி பெருமைப்படுத்தியுள்ளது.

யாழ் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயரான வ. தியோகுப்பிள்ளை அவர்கள் சிறந்த கல்விமான். திருச்சபைச் சட்டத்தில் இளங்கலைப் பட்டத்தையும், இலண்டன் இளங்கலைப் பட்டத்தையும், இலங்கையில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றதுடன் மெய்யியலில் சிறப்புப்பட் டத்தையும் இறையியலில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். பல ஆண்டுகள் கல்வித்துறையில் அதிபராகப் பணிபுரிந்தவர்.

கிறிஸ்தவ இலக்கியங்கள், வரலாறு போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்ட அவர் 'கிறிஸ்தவ போதகம்' மூன்று காண்டங்களையும் வெளியிட்டிருந்தார். நாட்டுக்கூத்து மற்றும் பாரம்பரியக் கலைகளை அபிவிருத்தி செய்வதில் அக்கறை காட்டியவர்

திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் துணை ஆயராக இருந்த காலத்தில் (1967-1972) மறை மாவட்ட வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் பல வகையிலும் பங்களித்தவர் ஆலோசனை வழங்குபவராக, வழிகாட்டுபவராக, நெறிப்படுத்துபவராக, ஒருங்கமைப்பவராக அவர் ஆற்றிய பணிகள் இன்றும் நினைவு கூரப்படுகின்றன.

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் இரண்டாவது பத்திரிகையான (முதல் வெளியீடு "யாத்திரிகன்" -1925ம் ஆண்டு முதல் வெளிவந்து பின் நிறுத்தப் பட்டது) "தொண்டன்" இதழை உருவாக்கி வளர்த்து விட்டதில் ஆயருக்குப் பெரும் பங்கு உண்டு. அதன் ஆசிரியராகவும் சில ஆண்டுகள் பணிபுரிந்தவர்.

ஆயர் அவர்கள் யாழ் மறைமாவட்ட ஆயராகப் பணிபுரிந்த காலம் மிகவும் முக்கியமானது. போர்ச் சூழலில் பாதிக்கப்பட்ட மக்கள் பக்கம் நின்று நீதிக்காக அவரது குரல் உரத்து ஒலித்ததை அனைவரும் அறிவர். அவரது பேட்டிகள், அறிக்கைகள் துணிச்சலுடன் உண்மை நிலையைத் தோலுரித்துக் காட்டுவனவாக அமைந்திருந்தன.

இவ்வாறு நீதிக்காகவும், மக்களுக்காகவும், அவர் தம் மொழி கலாசாரத்துக்காகவும் இறையாட்சியின் வளர்ச்சிக்காகவும் அர்ப்பணத்தோடு சேவையாற்றிய ஆயர் அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் பட்டமளித்துக் கௌரவப்படுத்தியது மிகவும் பொருத்தமானது. தனது முன்னாள் ஆசிரியரின் - ஆயரின் கௌரவத்தில் தொண்டன் பெருமிதம் கொள்வதோடு நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

**மலர்வேந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka

# காற்றில் கலந்து வரும்

**கேட்டுப் பாருங்கள்**

## இலங்கை வானொலி தேசிய சேவையில் கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்

## ஒக்டோபர் - 1999

நாள் : 17
நேரம் : மாலை 7.00 மணி
**புதிய உலகம்**

நாள் : 19
நேரம் : மாலை 7.45 மணி
**சிறுவர் உலகம்**

நாள் : 23, 24, 25, 26, 27, 28, 29
நேரம் : 5.30 மணி
**கத்தோலிக்க நற்சிந்தனை**

நாள் : 31
நேரம் மாலை 7.00 மணி
**புதிய உலகம்**

நாள் : 02
நேரம் : மாலை 7.45 மணி
**சிறுவர் உலகம்**

நாள் : 6, 7, 8, 9, 10, 11, 12,
நேரம் : காலை 5.30 மணி
**கத்தோலிக்க நற்சிந்தனை**

**தொகுப்பு :** மலர்வேந்தன்
**தொடர்பு :** சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண். 44
மட்டக்களப்பு - 30000

VANASINGE PRINTERS, BATTICALOA.
Cover Printed by St. Joseph's Catholic Press, Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org